டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 30.7.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 035 - Madurai | Online Edition

# தென்னிந்திய பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்யக்கூடும்!

## இந்திய வானிலை மையம் தகவல்

புது தில்லி, ஜூலை 29

தென்னிந்திய தீபகற்பத்திற்கு உட்பட்ட தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கடலோர ஆந்திரா, ஏனாம், தெலங்கானா மற்றும் ராயலசீமா பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஆங்காங்கே விட்டுவிட்டு மழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது.




தமிழ்நாட்டில் இன்று ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர கர்நாடகா, லட்சத்தீவுகள், கேரளா மற்றும் மாஹே பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும், உட்புற கர்நாடகாவில் இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பரவலாக பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, மாஹே மற்றும் தெற்கு உட்புற கர்நாடகாவில் இன்றும், நாளையும் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ை மயம் தெரிவித்துள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# அலங்காநல்லூர் வட்டாரத்தில் மண்வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூலை 29

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் சேந்த மங்கலம் கிராமத்தில் மண்வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 29.7.24ம் தேதி அன்று நடைபெற்றது. அதில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் அலங்காநல்லூர் வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், மண்வள மேலாண்மை பயன்பாடுகள் அதன் அவசியங்கள் மற்றும் மத்திய மாநில திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் மற்றும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு விதைகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது மற்றும் பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம் குறித்து பேசி அனைவரையும் வரவேற்றார். நடமாடும் மண்பரிசோதனை நிலையம் வேளாண்மை அலுவலர், மதுரை சூர்யபிரபா வயலில் மண்மாதிரிகள் சேகரித்தல், மண் பரிசோதனை செய்வதன் அவசியம் மற்றும் நன்மைகள், மேலும் மண்ணின் வளத்தையும் அதில் உள்ள சத்துக்களையும் மேம்படுத்து வதற்கும் உரச் செலவைக் குறைத்து அதிக மகசூல் பெறு வதற்கும் அதிக உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தெளிப்பதால் காற்று மாசுபடுவதைக் தவிர்ப்பதற்கும் மண் பரிசோதனை செய்தல் மிகவும் குறித்த தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

அலங்காநல்லூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாலாமணி, இயற்கை வேளாண்மை முறைகள் பற்றியும் அதற்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல் திட்டம் குறித்து எடுத்துரைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் இராமன் பேசுகையில் காரீப் பருவத்தில் பயிர் செய்யக்கூடிய பயிர்களுக்கு பசுந்தாள் உரப்பயிர்கள், இயற்கை பூச்சி விரட்டிகளான இஞ்சி பூண்டு கரைசல்;, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம், மண்புழு உரம் பயன்பாடுகள் ஆகியவற்றின் மூலம் மண்வளத்தை பெருக்கி அதிக மகசூல் பெறலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் ப.வேல்முருகன் நன்றி கூறினார். பயிற்சிக் கான ஏற்பாடுளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சௌந்த ராஜன், வசந்தி செய்து இருந்தனர்.




# பொறி வண்டுகள் - ஓர் பார்வை!

கொள்ளையடிக்கும் வண்டு என்ற பொறிவண்டு ஒரு இறை விழுங்கி.

இதன் புழு மற்றும் வண்டு சாறு உறிஞ்சும் மாவுப்பூச்சி, வெள்ளை அசுவிணி, பயிர் சிலந்தி, இலைபேன், செதில் பூச்சி போன்ற தீமை செய்யும் பூச்சிகளை கடித்து தின்று அழிக்கிறது.

ஒரு ஏக்கருக்கு 1500 என்ற எண்ணிக்கையில் வளர்ந்த வண்டுகளை பரவ விடவேண்டும். இந்த வண்டு மாவுப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ யின் வளர்ச்சி நிலைகளை தின்று அழிக் கிறது. உழவர்கள் வண்டுகள் அல்லது வளரும் புழுக்களை பயன்படுத்தி பூச்சி மேலாண்மை செய்ய லாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.®
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளுக்கு பட்டுப் பூச்சி வளர்ப்பு பயிற்சி

இராணிப்பேட்டை, ஜுலை 29

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் பல்லேரி கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பாக ஆத்மா திட்டத்தில் மல்பெரி பயிர் சாகுபடி மற்றும் பட்டுப்பூச்சி வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தலைமை தாங்கி வேளாண் துறை சார்ந்த திட்டங்களான முதல் அமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் மற்றும் வரப்பில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்வதால் கிடைக்கும் நன்மைகள், துவரை சாகுபடி பரப்பு விரிவாக்க திட்டம் மற்றும் உயிர் உரங்களின் பயன்கள் ஆகியவற்றை விளக்கினார்.




தொடர்ந்து இளநிலை பட்டு ஆய்வாளர் கோடீஸ்வரி பங்கேற்று மல்பெரி சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும் லாபகரமான முறையில் பட்டு வளர்ச்சி வளர்ப்பது பற்றியும் பட்டு வளர்ச்சியில் ஏற்படும் இடையூறுகள் அவற்றை எவ்வாறு சரி செய்தல் குறித்தும் பட்டு வளர்ச்சித் துறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்தும் அவற்றை பெற வழிமுறைகள் குறித்தும் விளக்கினார். மேலும் செயல் விளக்கங்கள் மூலம் மல்பெரி சாகுபடியில் பூச்சி நோய் கட்டுப்பாடுகள் மற்றும் பராமரிக்கும் முறைகள் குறித்தும் விளக்கினார்.

தொடர்ந்து சசிகலா வட்டார தொழில்நுட்ப மேலாளர் உழவன் செயலி குறித்தும் மண்வள மேம்பாடு குறித்தும் விளக்கினார். நர்மதா உதவி தொழில் நுட்ப மேலாளர் நன்றியை தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 29.07.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 50 | 55 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 55 | 60 | 57 | உருளை (கோலார்) | 44 | 50 |
| 1B | கத்திரி(Nadu) | 65 | 70 | 57A | உருளை(ஊட்டி) | 75 | 80 |
| 2 | வெண்டை | 38 | 42 | 58 | மேரக்காய் | 30 | 35 |
| 3 | தக்காளி (நாடு) | 22 | 25 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 34 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 22 | 25 | 60 | கேரட் | 100 | 110 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 66 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 56 | 62 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 50 | 55 |
| 7 | பீர்க்கன் | 35 | 40 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 30 | 36 |
| 9 | பாகற்காய் | 60 | 66 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 50 | 55 |
| 11 | பூசணி | 30 | 36 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 25 | 28 | 68 | பூண்டு | 190 | 268 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 60 | 66 | 69 | இஞ்சி | 138 | 142 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 90 | 98 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 38 | 42 | 71 | பென்னி பீன்ஸ் | 65 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 36 | 39 | 72 | குடமிளகாய் | 45 | 68 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 70 | 74 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 50 | 54 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 33 | | | | |
| 21 | மாங்காய் | 35 | 40 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 70 | 75 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 46 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 15 | 18 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 15 | 18 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 15 | 18 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 15 | 18 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 40 | 44 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 36 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | | | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | | |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 45 | 50 | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 70 | 75 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 75 | 85 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 120 | 150 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# உயிர்ம (அங்கக பண்ணையம்) ஊரக இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

சிவகங்கை, ஜூலை 29

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டாரம் வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்புத் திட்டம் - வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் உயிர்ம (அங்கக பண்ணையம்) தொடர்பான ஊரக இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி யானது 22.7.24 முதல் 27.7.24 வரை நடைபெற்றது. சிவகங்கை, மானாமதுரை, காளையார்கோவில், இளையான்குடி ஆகிய வட்டாரங் களில் இருந்து தலா 28 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முதல் நாள் பயிற்சியில் செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலைய முனைவர் பாபு பேராசிரியர் அங்கக வேளாண்மையில் உள்ள சவால்கள், அங்கக வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு மற்றும் அங்கக வேளாண்மை பொருட்கள் முக்கியத்து வத்தினையும், அங்கக வேளாண்மை நெறிமுறைகள் பற்றிய தொழில்நுட்ப கருத்துக்கள் வழங்கினார். வேளாண்மை துணை இயக்குநர் (ஓய்வு) மணி வண்ணன் இயற்கை வேளாண்மையில் மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்மையினை ஆராய்ந்து அங்கக உரங்களான உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், மண்புழு உரம் பயன்படுத்தும் முறைகள் மற்றும் நன்மைகள் பற்றியும் தொழில்நுட்ப கருத்து வழங்கினார்.

இரண்டாவது நாள் பயிற்சியில் முற்பகல் முனைவர் ராஜேஸ் நல்லையா (பயிற்றுநர்) இயற்கை வேளாண்மைகள் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றிய தொழில்நுட்ப கருத்துக்கள் வழங்கினார். மேலும் முனைவர் ராமகிருஷ்ணன் (வேளாண் ஆராய்சி நிலையம் குன்றக்குடி) நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றிய தொழில்நுட்ப கருத்து வழங்கினார். பிற்பகல் லயோலா அன்புக்கரசி, வேளாண்மை அலுவலர் விதையின் வகைகள் மற்றும் விவசாயத்தில் விதையின் பங்கு பற்றிய தொழில்நுட்ப கருத்து வழங்கினார். மேலும் விதை பரிசோதனை நிலையம் களப்பயிற்சி நடத்தப்பட்டது.

மூன்றாவது நாள் முற்பகல் பயிற்சியில் யோகேஸ்வரன், வேளாண்மை அலுவலர் விதைப்பண்ணை அமைத்தல் மற்றும் அங்கக சான்று தொடர்பாகவும், சதிஸ்குமார், மீன்வளத்துறை ஆய்வாளர் மீன்வளர்ப்பு செய்வதினால் ஈட்டும் இலாபங்கள் தொடர்பான தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினார். பிற்பகல் பயிற்சியில் மண்பரிசோதனை செய்வதன் அவசியம் மற்றும் அதன் நன்மைகள் பற்றியும், மண் பரிசோதனை மூலம் பயிர்களுக்கு இடும் உரங்கள் பற்றியும், மண்பரிசோதனை நிலையம் களப்பயிற்சி நடத்தப்பட்டது.

நான்காவது நாள் பயிற்சியில் முற்பகல் கருணாநிதி, வேளாண்மை அலுவலர் உயிர் உரங்கள் தயாரிப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய தொழில்நுட்ப கருத்து வழங்கினார். மேலும் ந.சண்முக ஜெயந்தி,வேளாண்மை இணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) ஊட்டமேற்றிய தொழு உரம்,மண்புழு உரம் பற்றிய தொழில்நுட்ப கருத்து வழங்கினார். பிற்பகல் பயிற்சியில் சரவணன், கரும்பு அலுவலர் கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாக முறைகளை எடுத்துக் கூறினார். செல்வம்,கண்காணிப்பாளர் (வேளாண் வணிகம்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார்.

ஐந்தாம் நாள் பயிற்சியில் முற்பகல் ம.செல்வி வேளாண்மை துணை இயக்குநர், (நுண்ணீர்பாசனம்) சொட்டு நீர்ப்பாசனத்தின் அவசியம் அதன் நன்மைகள் மற்றும் திட்டம் தொடர்பாக தொழில் நுட்ப உரையாற்றினார். ரெங்கசாமி முன்னோடி விவசாயி பாரம்பரிய நெல் இரகங்கள் சாகுபடி அதன் முக்கியத்துவங்கள் சாகுபடி செய்யும் முறைகள் பற்றியும் கூறினார். பிற்பகல் பயிற்சியில் சேக் ஆசிப் இளநிலை பட்டு ஆய்வாளர் மல்பெரி செடிகள் வளர்ப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு முறைகள் பற்றியும் கூறினார். விதை சுத்திகரிப்பு நிலையம் களப்பயிற்சி நடத்தப்பட்டது.

ஆறாம் நாள் பயிற்சியில் முற்பகல் மு.ஞானப்பிரதா வேளாண்மை அலுவலர் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றி கூறினார். க.வீரையா, வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) உழவர் பயிற்சி நிலையத்தில் செயல்படுத்தப்படும் பயிற்சிகள், விரிவாக்க சீரமைப்புத் திட்டம் (அட்மா) பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா, செயல்விளக்கங்கள், இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் இதர திட்டங்களை பற்றி எடுத்து கூறினார்.

பிற்பகல் பயிற்சியில் கலந்து கொண்ட இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் பயிற்சி கையேடுகளை சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மு.லட்சுமிபிரபா, மற்றும் சிவகங்கை வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகஜெயந்தி வழங்கினார்கள்.

மேலும் பயிற்சி நிறைவில் சிவகங்கை வேளாண்மை உதவி இயக்குநர் அ.வளர்மதி, நன்றியுரையாற்றினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பெருந்துறை வட்டாரத்தில் புதிய சன்ன இரக நெல் பயிர் சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஜூலை 29

ஈரோடு வட்டாரம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் பெத்தாம்பாளையம் வருவாய் கிராமத்தில் 25.7.24 அன்று உழவர்களுக்கு புதிய சன்ன இரக நெல் இரகங்கள் குறித்த சாகுபடி பயிற்சி ஈரோடு வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.வெங்கடேஸ் தலைமை ஏற்று பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சிரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையில் பசுந்தாள் உர விதைகள் பற்றி விளக்கினார். மேலும் இதில் பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்களையும் நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தெளிவாக விளக்கினார். பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் முனைவர் ச.அமுதா பேசுகையில் புதிய நெல் ரகங்கள் பற்றியும் அவற்றின் குணாதிசயங்கள் முக்கிய பூச்சிகள் மற்றும் நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை அடையாளம் காணுதல் சுற்றுச்சூழல் வரையறுத்தல் பொருளாதார வரம்புகளை உருவாக்குதல், பற்றி கூறினார். இப்பயிற்சியில்; துணை வேளாண்மை அலுவலர் அருள்மொழிவர்மன் பேசுகையில் துவரை வரிசை நடவு முறைகள் பற்றியும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையை சார்ந்த ராமகிருஷ்ணன், துணை வேளாண்மை அலுவலர் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் அவற்றை செயல்படுத்தும் முறை பற்றியும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர். உதவி வேளாண்மை அலுவலர் இளஞ்செழியன் பேசுகையில் PM Kissan பற்றிய விவரங்களை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# எஸ்.புதூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சி



சிவகங்கை, ஜூலை 29

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கான உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை “INM IN PULSES” என்ற தலைப்பில் மாந்தங்குடிபட்டி கிராமத்தில் 23.7.24 அன்று நடத்தபட்டது.

இப்பயிற்சிக்கு எஸ்.புதூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனைபடி துணை வேளாண்மைஅலுவலர் பயிற்சியினை தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்கினார்.

பயிற்சிக்கு வேளாண்மை ஆலோசகராக சத்யம் பயோ டிரேடர்ஸ் – மதுரை இயக்குநர் தவராஜன் கலந்து கொண்டுப யிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயறு வகை பயிர்களில் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை பற்றி எ டுத்து கூறினார். நோய் மற்றும் பூச்சி நோய்கள் வருவதை குறைப்ப தற்கு விதைநேர்த்தி செய்து விதைக்கும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற் றியும் விரிவாக எடுத்து கூறினார். துணை வேளாண்மைஅலுவலர் பாலமுருகன், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதைப்பதற்கு முன்பு மண் பரிசோதனை செய்ய வேண்டும் மற்றும் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் பயிர்களுக்கு தேவையான ஊட்டசத்து கிடைக்கும் மற்றும் பூக்கும் தருணத்தில் இலை வழி உரமாக டி.ஏ.பி 2 சதவீதம் தெளிப்பதன் மூலம் பூக்கள் அதிகம் பிடித்து காய்கள் அதிகம் காய்த்து மகசூல் அதிகரிக்கும் என்ற தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் கார்த்திக்ராஜா பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ்

செயல்படுத்தபடும் அனைத்து திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார் . வட்டார தொழில் நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு அட்மா திட்டம் பற்றியும் அதன் மூலம் நடத்தபடும் விவசாயிகள் பயிற்சியிகள் மற்றும் செயல் விளக்கம் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். பயிற்சிக்கு உண்டான ஏற்பாடு களை விஜய் ஆனந்த் உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்திருந்தார்.




# கார்பன் இல்லாத உலகை எப்படி படைப்பது? தெரியுமா?

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்நாளில், குறிப்பிட்ட அளவு கார்பன் டை ஆக்சைடு வாயுவை வெளியிடுகிறோம். ஒரு வருடத்திற்கு ஒருவர் எவ்வளவு கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றுகிறார் என்பதை, கார்பன் பிரிண்ட் (CARBON PRINT) மூலமாக கணக்கிடுகிடப்படுகிறது.

இதில் நாம் வெளியிடும் மூச்சு காற்று உட்பட நாம் பயன் படுத்தும் இரு சக்கர, நான்கு சக்கர வாகன புகை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அந்த வகையில் மனிதன் தன்னுடைய வாழ்நாளில் 200 டன் கார்பன் டை ஆக்சைடு வெளியிடுகிறான், ஆனால் அந்த 200 டன் கார்பன் டை ஆக்சைடு வாயுவை கிரகித்து அதை ஆக்ஸிஜனாக மாற்ற குறைந்தது 1000 மரங்களாவது தேவைப்படும். நம்முடைய வாழ்நாளில் எத்தனை மரங்களை நட்டு இருக்கிறோம் என்றால் அதற்கான பதில் பூஜ்ஜியமாக தான் உள்ளது.

**மரங்களுக்கும் மழைக்கும் என்ன சம்மந்தம் தெரியுமா?**

மரங்கள் நீராவியை உருவாக்க நிலத்தடி நீரும் வெப்பமும் தேவை. மரம் நிலத்தடியிலிந்து நீரை உறிஞ்சி அனைத்துப் பாகங்களுக்கும் கடத்துகிறது. இலைகளில் உள்ள துளைகள் திறக்கப்பட்டு நீர்த்துளிகள் எல்லாம் வளிமண்டலத்தில், உள்ள மாசுகளில் ஓட்டிக் கொள்ளுகின்றன. நீர்த்துளிகளைப் பிடித்து வைக்கும் மாசுகளில் ஒட்டிக் கொள்ளுகின்றன. நீர்த்துளி களைப் பிடித்து வைக்கும் மாசுக்களை வெளியிடுவது மரங்கள் தான். மரங்கள் வெளியேற்றும் வேதிப் பொருட்கள் மாசுகளாக உருமாறி, நீர்த்துளிகளை பிடித்து வைக்கின்றன. இவை தான் நாம் பார்க்கும் மேகங்கள், இந்த மேகங்களின் அடர்த்தி அதிக மாகும் போது பூமியின் ஈர்ப்பு விசையால் மழை பொழிகின்றன.

நாம் வெளியிடும் கார்பன் மாசுவை, கிரகித்து அதை ஆக்ஸிஜனாக மாற்ற நாம் முன்னெடுக்கும் முயற்சிகளை தான் கார்பன் நியூட்ரல் (CARBON NEUTRAL) என்கிறோம்.

சமீபத்திய கணிப்பின்படி, இந்தியாவில், ஒரு நபருக்கு 23 மரங்கள் மட்டுமே இருக்கின்றன.

இந்த கணக்கு ஆயிரங்களை தொட வேண்டும். அப்போது தான் நமக்கும், நம் குழந்தைகளுக்கும் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். அதன் மூலமாக கார்பன் இல்லாத பசுமை உலகை உருவாக்கிடவேண்டும்.

**மரங்களை நட நாம் என்ன செய்ய வேண்டும்**

1) எங்கு எங்கு வாய்ப்புள்ளதோ அந்த அந்த இடங்களில் மரங்களை நடவேண்டும்.

2) மரக்கன்றுகளை நட வாய்ப்பு இல்லாதவர்கள், அரசின் அனுமதியுடன் அரசு நிலங்கள், அரசு பூங்காக்களில், நடலாம்.

3) மியவாக்கி, குறுங்காடு போன்ற அமைப்புகளை உருவாக்கலாம்.

4) மரம் நடுவது மழை பெறுவதற்காக மட்டுமல்ல , கார்பன் அளவை குறைக்கவும் பயன்படுகிறது.




5) வனத்துறை மற்றும் வேளாண்துறை வாயிலாக பசுமை போர்வை திட்டத்தின் கீழ் மரக்கன்று கள் நடுவதற்கு இலவசமாக வழுங்கபடுகின்றன.

6) ஒரு மரத்தை வெட்டினால் அதற்கு பிரதிபலனாக 10 மரங்களை நடுவது என நீதிமன்ற உத்தரவு கூட இருக்கிறது. எனவே மரங்களை நட்டு காற்றில் பசுமை இல்ல வாயுக்களை உறிஞ்சி நல்ல சுத்தமான காற்றை வழங்கிட உதவுகிறது. மனிதனுக்கு உயிர்வாழ நுரையீரல் எப்படி அவசியமோ, அதுபோல பூவுலகம் வாழ்வதற்கு மரங்கள் தான் நுரையீரல் போல.

மரங்களை நடுவோம், மாசுகளை குறைப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO UREA PLUS
இலைவழி தெளிப்பு
1லி. நீருக்கு 5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# வறட்சியில் வருமானம் தரும் சீமை இலந்தை சாகுபடி

சீமை இலந்தை ஆயுர்வேத மருத்துவத்தில் மிகவும் பயன்படுத்தப் படுகிறது. இதன் 100 கிராம் பழத்தில் 5.66 கிராம் மாவுசத்து, 0.34 கிராம் புரதச்சத்து, 0.06 சதம் கொழுப்புச் சத்து, 30.6 மி.கிராம் பொட்டாசியம், 6.0 மி.கிராம் கால்சியம், 3.0 மி.கிராம் மக்னீசியம், 6 மி.கிராம் பாஸ்பரஸ், 0.13 மி.கிராம் இரும்புச்சத்து, 19.3 மி.கிராம் விட்டமின் சி, 0.01 மி.கிராம் துத்தநாகம், 0.3 மி.கிராம் நியாசின் மற்றும் 22 கி.கலோரி ஆற்றல் போன்றவை உள்ளன.

**இரகங்கள்**

பனாரசி, உம்ரான், கோலா, கைத்திளி மற்றும் கோமா கீர்த்தி போன்றவை முக்கிய சீமை இலந்தை இரகங்களாகும்.

**சில முக்கிய இரகங்களின் பண்புகள் வருமாறு.**

**கைத்திளி**

இந்த ரகத்தின் மரத் தண்டுகளில் நேரான முட்கள் காணப்படும். ஆனால் தெளிவாக தெரியாது. இலைகள் முட்டை வடிவில் சிறிய ரம்ப விளிம்புடன் இருக்கும். பழங்கள் முட்டை முதல் நீள்சதுர வடிவில் 3.37 செ.மீ நீளமாகவும், 1.9 செ.மீ தடிமனாகவும் 6.22 கிராம் எடையுடனும் கூர்மையான நுனியையும் கொண்டிருக்கும். இதன் கொட்டை நீள்வட்டமாகவும் கூர்மையான நுனியையும் கொண்டது.

**உம்ரான்**

இந்த ரகத்தின் மரங்கள் நடுத்தர அளவில் புதர் போன்ற சாய்ந்த தரையைத் தொடும் கிளைகளுடன் இருக்கும். முட்கள் வளைந் திருக்கும். முட்டை வடிவ நீள்வட்ட இலைகளுடன் விளம்புகள் ரம்ப வடிவில் இருக்கும். பழங்கள் நீள்வட்ட வடிவில் 4.2 செ.மீ நீள மாகவும், 3.2 செ.மீ தடிமனாகவும் இருக்கும்.

**கோலா**

இது பரந்து விரிந்த மரத்தைப் பெற்றுள்ளது. பழங்கள் தட்டையாக கூர்மையான நுனியையும் கொண்டிருக்கும். பழத்தின் தோல் பிரகாசமான மஞ்சள் நிறமாகவும், மென்மையாகவும் பளபளப்பாக வும் காணப்படும். இந்த இரகம் ஜனவரி மாதத்தில் அறுவடைக்கு வரும். ஒவ்வொரு பழமும் 14 முதல் 25 கிராம் எடை கொண்டது. ஒரு மரம் வருடத்திற்கு 100 முதல் 120 கிலோ வரை மகசூல் தரும்.

**பனாரசி**

இது ஒரு இடைப்பருவ இரகம். மரங்கள் 8-12 மீட்டர் உயரம் வளரும். பழங்கள் கோள வடிவ நீள்வட்டமாகவோ அல்லது நீளமான குறுகலான முனையுடனோ இருக்கும். பழுக்காத பழங்கள் பச்சை நிறத்தில் இருக்கும். பழுத்தபின் பழங்கள் தங்க மஞ்சளாக நிறத்தில் மாறும். இது தமிழ்நாட்டிற்கு ஏற்ற இரகமாகும். ஒரு மரம் வருடத்திற்கு 100 முதல் 110 கிலோ வரை மகசூல் தரும்.

**மண்**

சீமை இலந்தை சாகுபடிக்கு இரு மண்பாடு செம்மண் நிலங்கள் மிகவும் ஏற்றவை. இப்பயிரை உவர் நிலகளிலும், வறட்சியான பகுதிகளிலும் சாகுபடி செய்யலாம். மண்ணின் கார அமிலத் தன்மை 5 முதல் 9 வரை உள்ள நிலங்களில் இப்பயிரை சாகுபடி செய்யலாம்.

**தட்பவெப்பநிலை**

இப்பயிரை வெப்ப மண்டலப் பகுதிகளிலும், வறண்ட வானிலை நிலவும் பகுதிகளிலும் சாகுபடி செய்யலாம். இப்பயிர் அதிகளவு வெப்பநிலை நிலவும் காலத்திலும், வறட்சியான காலத்திலும் இலைகளை உதிர்த்து, வளர்ச்சியை நிறுத்தி உறக்க நிலைக்கு செல்லும்.

**பயிர் பெருக்கம்**

இப்பயிரை மொட்டு கட்டப்பட்ட செடி முறையில் பயிர் பெருக்கம் செய்யலாம்.

**நடவு முறை**

வரிசைக்கு வரிசை 8 மீட்டர் மற்றும் செடிக்கு செடி 8 மீட்டர் இடைவெளியில் 1 மீட்டர் ஆழ, அகல மற்றும் நீளமான குழிகள் எடுக்க வேண்டும். குழிகளை ஆறவிட்ட பின்பு 25 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் மற்றும் மேல் மண் கொண்டு குழிகளை நிரப்பி நீர் பாய்ச்ச வேண்டும். இலந்தையில் ஆணிவேர் விரைவாகத் தோன்றுவதால் வேர்ச்செடி விதைகளை குழிகளில் நேரடியாக விதைத்து, பின்பு வேர்ச்செடி விதைகளைக் குழிக்கு இரண்டு அல்லது மூன்று வீதம் 3 செ.மீ ஆழத்தில் ஊன்ற வேண்டும். விதைத்த 90 நாட்களில் நாற்றுகள் மொட்டுக் கட்டுவதற்குத் தயாராகிவிடும். விருப்பமான இரகங்களில் ஒரு ஆண்டு முதிர்ச்சி உள்ள குச்சியிலிருந்து திரட்சியான மொக்குகளைத் தேர்வு செய்து வேர்ச்செடிகளில் மூடி மொட்டுக்கட்டும் முறை மூலம் மொட்டுக்கட்ட வேண்டும். இவ்வாறு மொட்டுக் கட்டப்பட்ட செடிகளில் ஒரு வார காலத்தில் முளைகள் தோன்ற ஆரம்பிக்கும்.

இவ்வாறில்லாமல் நாற்றாங்காலிலேயே மொட்டுக்கட்டி, அந்தச் செடிகளை நன்கு தயாரிக்கப்பட்ட குழிகளில் நடவு செய்யலாம். பொதுவாக செடிகளை பருவமழை காலமான ஜூன் – ஜூலை மாதத்திலும், அக்டோபர் – நவம்பர் மாதத்திலும் நடவு செய்யலாம்.

**நாளை தொடரும்...**

தகவல் : **அ.சோலைமலை, ப. ஆர்த்தி ராணி, ப.பாக்கியாத்து சாலிகா, வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி – 628501 மற்றும் க. அண்ணா சாமி, புஸ்காரம் வேளாண்மைக் கல்லூரி, திருவருங்குளம், புதுக்கோட்டை (மாவட்டம்).**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# நெப்புகை கிராமத்தில் உயிர்ம பண்ணையம் பற்றிய விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, ஜூலை 29

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டத்தின் கீழ் நெப்புகை கிராமத்தில் உயிர்ம பண்ணையம் பற்றிய விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் குடுமியான்மலை வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) ஜெயபாலன், வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) அன்பரசன், வேளாண்மை அலுவலர் விக்னேஷ், கீரனூர் இயற்கை பண்ணை தலைமை நிர்வாக அலுவலர் கண்ணன், உதவி வேளாண்மை அலுவலர் கமலி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன், பயிர் அறுவடை பரிசோதனை அலுவலர்கள் திருமேனி மற்றும் சாமியப்பா ஆகியோர் கலந்துகொண்டனர். வேளாண்மை அலுவலர் விக்னேஷ் அனைவரையும் வரவேற்று பேசினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) அன்பரசன் பேசுகையில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், பி.எம்.கிசான் திட்டம் மற்றும் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் இதர திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக்கூறினார். வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) ஜெயபாலன் பேசுகையில் பசுந்தாள் உரப் பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பு மற்றும் கொளுஞ்சி ஆகியவைகளின் பயன்பாடு பற்றியும் நுண்ணூட்டங்கள் இடுவது பற்றியும், மீன் அமிலம், பஞ்சகாவ்யா மற்றும் பூச்சிவிரட்டி தயாரித்தல் பற்றியும் எடுத்துரைத்தார்.

கீரனூர் இயற்கை பண்ணை தலைமை நிர்வாக அலுவலர் கண்ணன் பேசுகையில் மண் வளம் பற்றியும், அதனை பராமரிப்பது பற்றியும், இராசயன உரங்களுக்கு மாற்றாக இயற்கை உரங்கள் எப்படி தயார் செய்வது மற்றும் ஏக்கருக்கு எவ்வளவு தேவை என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் இயற்கை முறையில் சமச்சீர் உரமிடல், நுண்ணூட்டம் இடுதல் பற்றி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் கமலி பேசுகையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள், தரிசு நில தொகுப்பை சாகுபடிக்கு கொண்டு வருதல் பற்றி எடுத்துக் கூறினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கமலி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## திடக்கழிவு துர்நாற்றத்தை போக்க-TNAU Digest

- இத்தொழில்நுட்பம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் 2019 ஆம் ஆண்டு திடக்கழிவுகளால் துர்நாற்றம் வீசும் பகுதிகளான மட்கு உரம் தயாரிக்கும் பகுதிகள், காய்கறி மற்றும் பழ சந்தை, மீன் மற்றும் மாமிச சந்தை பகுதிகளுக்காக கண்டறியப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் நானோ தொழில்நுட்பத்தின் மூலம் கண்டறியப்பட்ட கரைசலை கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் தெளித்தால் விரைவில் கழிவுகள் மட்குவதுடன் துர்நாற்றமும் வீசாது.

- இந்த நானோ கரைசலில் பாக்டீரியாக்கள் நானோ பொருட் களில் செறிவூட்டப்பட்டுள்ளது. மேலும் இதில் அசாடிராக்டின் எனும் பொருள் இருப்பதனால் புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கின்றது.

- இக்கரைசல் மூலம் கழிவுகளை விரைவாக மட்க வைப்பது மட்டுமல்லாமல் துர்நாற்றம் வீசுவதையும் தடுக்கலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் ஆகியோர் கூறியுள்ளனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வான்கோழி இறைச்சி - ஓர் பார்வை



மேலைநாடுகளில் இறைச்சி உற்பத்தியில் வான்கோழிகளும், மற்ற கோழியினங்களைப் போல் ஒரு முக்கியமான, சமமானப் பங்கினைப் பெறுகின்றன. நமது தமிழக மக்களிடையே வா ன்கோழி இறைச்சியின் தரத்தைப் பற்றியும், அந்த இறைச்சியில் உள்ள ஊட்டச்சத்துகளின் தன்மையைப் பற்றியும் போதிய விழிப்புணர்வு இல்லாமல் உள்ளது. ஆகவே,வான்கோழி இறைச்சி உற்பத்தியைப் பற்றியும்,வான்கோழி இறைச்சியில் காணப்படும் ஊட்டச்சத்துகள் குறித்தும் காண்பது பொருத்தமாக இருக்கும்.

மேலும் வான்கோழிகள், கோழி மற்றும் வாத்துகளைப் போல அதிக எண்ணிக்கையில் முட்டைகளை இடுவதில்லை, வான் கோழியானது முக்கியமாக இறைச்சிக்காகவே வளர்க்கப்படு கிறது. வான்கோழிகளின் சிறப்பு என்னவெனில் அவைகள் எந்தவிதமான சுற்றுப்புற சூழ்நிலையிலும் சிறந்த முறையில் வளர்ந்து அதிகப்படியான உடல் எடையை அடையும் ஆற்றல் பெற்றவை. இறைச்சிக் கோழிகளைப் போல் அல்லாமல் வான்கோழிகள் சுமார் 14 –லிருந்து 16 வாரம் வரை வளர்ந்து முழு வளர்ச்சியை அடையும்.

முந்தைய காலங்களில் காடுகளில் மட்டுமே இருந்து வந்த வான்கோழிகள் பின்பு படிப்படியாக வீடுகளில் வளர்க்கப்பட்டு, வீட்டுப் பறவையாகின. தற்போது வியாபார ரீதியில் வான் கோழியானது பண்ணையாளர்களின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் நன்றி தெரிவிக்கும் விழாவில் வான்கோழி இறைச்சி முக்கியமாக உண்ணும் முறைத் தொடங்கப்பட்டு இன்று வரை ஒரு முக்கியமான பாரம்பரிய சடங்காகப் பின்பற்றப்படுகிறது. மேலும் கிருஸ்துமஸ் போன்றப் பண்டிகைக் காலங்களிலும் வான்கோழி இறைச்சி உண்பது ஒரு முக்கிய பாரம்பரிய சடங்காக கருதப்பட்டு பின்பற்றப் படுகிறது. இவ்வாறாக பண்டிகை நாள்களில் மட்டுமே உண்ணப் பட்டு வந்த வான் கோழி இறைச்சியானது தற்போது ஆண்டு முழுவதும் உண்ணப்பட்டு அன்றாட உணவில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. வெளிநாடுகளில் மட்டுமின்றி நமது தங்கத் தமிழகத்திலும் வான்கோழி இறைச்சி அசைவப் பிரியர்களிடையே மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இறைச்சி, சிகப்பு இறைச்சி, வெள்ளை இறைச்சி என இரு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. வான்கோழி இறைச்சி வெள்ளை இறைச்சி வகையைச் சார்ந்ததாகும்.



வான்கோழி இறைச்சியில் புரதச்சத்து அதிகமாகவும், கொழுப்புச் சத்து குறை வாகவும் உள்ளது. வான்கோழி இறைச்சியில் தண்ணீர்ச் சத்து 73.82 விழுக்காடும், புரதச்சத்து 21.77 விழுக்காடும், மொத்தக் கொழுப்புச்சத்து 2.86 விழுக்காடும், சாம்பலச் சத்து 1.00 விழுக்காடு மற்றும் எரிசக்தி 268 கிலோ கலோரிகள் உள்ளன. குறிப்பாக வான்கோழி இறைச்சியில் கொழுப்பு மற்றும் கொலஸ்டிரால் குறைவாகவும், புரதச்சத்து அதிகமாகவும் உள்ளது, பொட்டாசியம், கால்சியம்,மெக்னீசியம், செலீனிசியம், துத்தநாகம் மற்றும் சோடியம் போன்ற நுண்ணூட்டச் சத்துகளும் வான்கோழி இறைச்சியில் உள்ளன. மேலும் உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்கள், கொழுப்பு அமிலங்கள், உயிர்ச்சத்துகளான பி3, பி6 பி12 போன்றவைகளும் வான்கோழி இறைச்சியில் நிறைவாகவே உள்ளது.

வான்கோழி 16 வாரங்கள் முதல் 24 வாரங்கள் வரை தேவைக் கேற்ப இறைச்சிக்காக அறுக்கப்படுகின்றன. வான்கோழிகளில், பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை, நந்தனம் வான்கோழி-1 மற்றும் நாட்டு வான்கோழி ஆகிய மூன்று வகையான வான்கோழிகள் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை வான்கோழியின் உயிர் உடல் எடையானது,

நான்காவது வாரத்திலிருந்து மற்ற இரு வகைகளைவிட அதிகமாக உள்ளது. 16-வது வாரத்தில் பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை வான்கோழியின் உயிர் உடல் எடை 3.1 கிலோவாகவும், மற்ற இரு வகைகளின் உயிர் உடல் எடை 2.7 கிலோவாகவும் இருந்தது. 24-வது வாரங்களில் பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை வான்கோழியின் உயிர் உடல் எடை 4.7 கிலோவாகவும், மற்ற இரு வகைகளின் உயிர் உடல் எடை 3.9 கிலோவாகவும் இருந்தது. வான்கோழிகளின் மொத்த உடல் எடையில் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி உடலானது சராசரியாக 74.50 விழுக்காடு மற்றும் உண்பதற்கேற்ற இறைச்சியானது 70.14 விழுக்காடுமாக உள்ளது. இறைச்சி மிகுந்த உடலங்கப் பகுதிகளான மார்புப் பகுதி சுமார் 29 விழுக்காடு,தொடை 15 விழுக்காடு, கால் 14.7 விழுக்காடு மற்றும் இறக்கைப் பகுதி 15 விழுக்காடாகக் கிடைக்கப்பெற்றது.

**இறைச்சி** : எலும்பு விகிதம் மார்புப் பகுதியில் 3.34 : 1 ஆகவும், தொடைப் பகுதியில் 4.56 : 1 ஆகவும்,கால்ப் பகுதியில் 2.71 : 1 ஆகவும், இறக்கைப் பகுதியில் 1 : 1 ஆகவும், கழுத்து மற்றும் மார்புப் பகுதியில் 0.3 : 1 ஆகவும் இருந்தது.

நுகர்வோர்களிடையே நடத்தப்பட்ட கருத்தாய்வில் 16-வது வார வயதில் உள்ள இறைச்சி உண்பதற்கு உகந்ததாக இருந்தது. மேலும்,24-வது வார வயதில் உண்பதற்கேற்ற இறைச்சி விழுக்காடு அதிகமாகவும் கிடைக்கப் பெற்றது. வான்கோழி குஞ்சு பொரித்த நாள் முதல் 16-வது வாரம் வரையில் ஒரு கிலோ இறைச்சி உற்பத்தி செய்ய சராசரியாக 5.5 கிலோ தீவனமும் மற்றும் குஞ்சு பொரித்த நாள் முதல் 24-வது வாரம் வரையில் ஒரு கிலோ இறைச்சி உற்பத்தி செய்ய சராசரியாக 7.2 கிலே ாதீவனமும் தேவைப்படுகிறது. எனவே, இறைச்சிக்காக வளர்க்கப்படும் வான் கோழிகளை 16-வது வார வயதில் விற்பனை செய்வதே சாலச் சிறந்ததாகும், வான்கோழி இறைச்சிஅதிக புரதச்சத்துடனும், குறைந்த கொழுப்புடனும், உடலுக்கு மிக அவசியமான நன்மை பயக்கும் தீங்கற்ற கொழுப்பு அமிலங்களும் கொண்ட மிருதுவான இறைச்சியாக இருப்பதால், நுகர்வோருக்குவான்கோழி இறைச்சி ஒரு நல்ல உணவாக அமைவதோடு மட்டுமல்லாமல், பண்ணை யாளர்களுக்கும், வான்கோழி வளர்ப்பு நல்ல லாபம் தரும் தொழிலாக இருக்கிறது.

இதனை, **மூ.சுதா, இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி - 625 534. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்தார்.**

# ஆத்தூர் வட்டாரத்தில் நிலக்கடலை பயிரைத் தாக்கும் தண்டழுகல் நோய்

**அறிகுறிகள்**

- வெண்மையான பூசண வித்துக்கள் பாதிக்கப்பட்ட செடியின் மேல்புறத்தில் காணப்படுகின்றன.
- செடியின் அடிப்புறத்தில் காய்ந்தும், மஞ்சள்நிறமாகமாறியும் காணப்படுகிறது.
- பாதிக்கப்பட்டசெடிகள் அடிப்புறத்தில் திசுக்கள் உதிர்ந்து காணப்படும்.
- கடுகு போன்ற சிறியஅளவுஸ்கிலிரோசியத பாதிக்கப்பட்ட இடத்தில் காணப்படும்.
- பாதிக்கப்பட்ட செடியில் நீலம் கலந்த சாம்பல் நிறமுடைய விதைகள் உண்டாகின்றன.

**கட்டுப்பாடு**

- மண்ணின் மேலுள்ள கழிவுகளை, ஆழமாக உழவேண்டும்.

● விதையை டிரைகோடெர்மாவிரிடி 4 கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம் அல்லது டி.விரிடி 2-5 கிலோ/எக்டர் என்றளவில் 50 கிலோ தொழுஉரத்துடன் கலந்து மண்ணில் போடலாம். அல்லது ஆமணக்கு புண்ணாக்கு அல்லது வேப்பம் புண்ணாக்கு 500 கிலோ / எக்டர் என்ற அளவில் பயன்படுத்தலாம்.

● விதையை 3 கிராம் திரம் + கார்பன்டாசிம் என்றளவில் நேர்த்தி செய்து கட்டுப்படுத்தலாம் என சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மு.சம்பத்குமார் தெரிவித்தார்.



# கொடி வகை காய்கறிகளுக்கு ஆடிப்பட்டம் ஏற்றது தொழில்நுட்ப வல்லுநர் தகவல்

கொடி வகை காய்கறிகளுக்கு ஆடிப்பட்டம் ஏற்றது என கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜா தெரிவித்துள்ளார். அதிலும், ஆடிப்பட்டத்தில் பாகல், பீர்க்கன், புடலை மூன்றையும் சாகுபடி செய்யும்போது பூச்சி, நோய்த் தாக்குதல் குறைவாக இருக்கும். செடிகளின் வளர்ச்சியும் நன்றாக இருப்பதோடு, மகசூலும் சிறப்பாக இருக்கும். இந்த மூன்று பயிர்களுக்குமே ஆயுள் காலம் 6 மாதங்கள். பாகல், பீர்க்கன், புடலையில் நாட்டு ரகங்கள் விதவிதமாக இருந்தாலும், விதைகள் போதுமான அளவுக்கு கிடைப்பதில்லை. இதனால், பெரும்பாலும் ஒட்டு மற்றும் வீரிய ரகம்தான் சாகுபடி செய்யப்படுகிறது. கொடி வகை காய்கறி சாகுபடிக்கு, ஆனி மாதத்தில் ஏக்கருக்கு நான்கு டிப்பர் அளவில் எருவைக் கொட்டிக் கலைத்து, இரண்டு சால் உழவு செய்ய வேண்டும். தொடர்ந்து ரோட்டோவேட்டர் கொண்டு இரண்டு சால் உழவு மூலம் உழுது நிலத்தை சமன்படுத்தி, பந்தல் அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு கன அடி அளவில் குழி எடுத்து, நான்கு நாட்கள் வரை ஆறப்போட்டு... ஒவ்வொரு குழியிலும் அரை கூடை எரு மற்றும் மேல் மண் ஆகியவற்றைக் கலந்து நிரப்ப வேண்டும். பிறகு, குழிக்கு 5 விதைகள் வீதம் படுக்கை வசத்தில் விதைக்க வேண்டும். பாகல், புடலை விதைகளை விதைநேர்த்திச் செய்வது நல்லது. பீர்க்கன், நடவு செய்த மூன்றாம் நாளில் முளைக்கும்.

பாகல் மற்றும் புடல் ஆகியவை 7-ம் நாளில் முளைக்கும். 15-ம் நாளில் செடிகளை சுற்றி இருக்கும் களைகளைக் கையால் அகற்ற வேண்டும். 15-ம் நாளில் பீர்க்கனும்; 20-ம் நாளில் பாகல் மற்றும் புடலை ஆகியவையும் கொடி படரத் தொடங்கும். அந்தச் சமயத்தில் சின்னக் குச்சியை நட்டு, குச்சிக்கும், பந்தலுக்கும் ஒற்றைப் பிரி சணலை கட்டி கொடிகளை ஏற்றிவிட வேண்டும். கொடிகளை ஏற்றி விடும் போது, பக்க சிம்புகளை கிள்ளி விட வேண்டும்.

பீர்க்கன் 25 முதல் 30-ம் நாட்களுக்குள் பூவெடுக்கும். 40-ம் நாளில் இருந்து அறுவடைக்கு வரும். பாகல், புடல் ஆகியவை 30 முதல் 35 நாட்களுக்குள் பூவெடுத்து, 45 முதல் 50 நாளில் இருந்து அறுவடையாக ஆரம்பித்து விடும்.

ஒரு ஏக்கர் நிலத்தில் பாகல் மற்றும் பீர்க்கன் எதைப் பயிர் செய்தாலும், 5 முதல் 10 டன் வரை மகசூல் நிச்சயம். புடலையில் 10 முதல் 15 டன் மகசூல் கிடைக்கும்.

**வளர்ச்சியைத் தூண்டும் பிண்ணாக்குக் கரைசல்!**

கொடிப் பயிர்களை நடவு செய்த 20-ம் நாளில் ஏக்கருக்கு 10 கிலோ கடலைப் பிண்ணாக்கை 100 லிட்டர் தண்ணீரில் 2 நாட்கள் ஊற வைத்து, ஒவ்வொரு செடிக்கும் வேர்ப்பகுதியில் 250 மில்லி அளவுக்கு ஊற்றிவிட வேண்டும். சொட்டு நீர்ப்பாசனமாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், நேரடிப் பாசன மாக இருந்தால், 4 முதல் 7 நாட்களுக்கு ஒருமுறையும் பாசனம் செய்ய வேண்டும். பாசன நீருடன் 10 நாட்கள் இடைவெளியில் 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலையும், 200 லிட்டர் பஞ்சகவ்யா கரைசலையும் மாற்றி மாற்றிக் கலந்து விட வேண்டும்.

மாதம் ஒரு முறை 500 கிலோ எரு, தலா 1 கிலோ சூடோமோனஸ், டிரைக்கோ டெர்மா விரிடி ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து நிழலான இடத்தில் சணல் சாக்குப் போட்டு இரண்டு நாட்களுக்கு மூடி வைக்க வேண்டும். இந்த எருக்கலவையை, செடிக்கு 500 கிராம் வீதம் பிரித்து வைக்க வேண்டும்.

செடியின் வளர்ச்சி குறைவாக இருந்தால், 200 லிட்டர் தண்ணீரில் 50 கிலோ பருத்திப் பிண்ணாக்கு அல்லது 20 கிலோ கடலைப் பிண்ணாக்கை இரண்டு நாட்கள் ஊற வைத்து, செடிக்குச் செடி ஊற்றிவிட வேண்டும். ஆடிப்பட்டத்தில் பூச்சி, நோய்த் தாக்குதல் குறைவாக இருந்தாலும், காய்ப்புழுத் தாக்குதல் இருக்கும். இவற்றை கட்டுப்படுத்த இயற்கைப் பூச்சிவிரட்டிகளே போதுமானது.

கொடிப்பயிர்களுக்கு வசதிக்கு ஏற்ப (6 அடிக்கு 6 அடி), மூங்கில் பந்தல் அல்லது கல்தூண் பந்தல் அமைக்கலாம். 6 அடிக்கு 10 அடி இடைவெளியில் பாகலும், 6 அடிக்கு 12 அடி இடைவெளியில் புடலையும், 6 அடிக்கு 10 அடி இடைவெளியில் பீர்க்கனும் நடவு செய்யலாம்.

**முளைப்பைத் தூண்டும் சாணிப்பால்.**

பாகல், புடலை விதைகளை சாதாரணமாக நடவு செய்யும்போது முளைப்பு எடுக்க தாமதமாகும். சாணிப்பாலில் விதை நேர்த்தி செய்தால் விரைவாக முளைப்பு எடுத்துவிடும். விதை நேர்த்தி செய்ய, விதைகள் மூழ்கும் அளவுக்கு சாணிப்பால் தயார் செய்து, அதில் ஓர் இரவு, ஒரு பகல் ஊறவைக்க வேண்டும். ஊறவைத்த விதைகளை நடவு செய்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பு தரையில் உலர்த்தினால், விதைகள் ஒட்டாமல் தனித்தனியாக வரும். பிறகு, நடவு செய்யலாம். இப்படி நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு 600 கிராம் விதைகள் வேண்டும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**